ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 4.2 – பாலனாய்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 4.2 – பாலனாய்

‡ பாலன் ஆய் ⋆
ஏழ் உலகுண்டு பரிவின்றி ⋆
ஆல் இலை ⋆
அன்ன வசம் செய்யும் அண்ணலார் ⋆
தாள் இணை மேல் அணி ⋆
தண்ணம் துழாய் என்றே மாலும் ஆல் ⋆
வல்வினையேன் ⋆
மட வல்லியே ‖ **4.2.1** ‖

வல்லி சேர் நுண் இடை ⋆
ஆய்ச்சியர் தம்மொடும் ⋆
கொல்லைமை செய்து ⋆
குரவை பிணைந்தவர் ⋆
நல் அடி மேல் அணி ⋆
நாறு துழாய் என்றே சொல்லும் ஆல் ⋆
சூழ் வினையாட்டியேன் ⋆
பாவையே ‖ **4.2.2** ‖

பாவியல் வேத ⋆
நன்மாலை பல கொண்டு ⋆
தேவர்கள் மா முனிவர் ⋆
இறைஞ்ச நின்ற ⋆
சேவடி மேல் அணி ⋆

செம் பொன் துழாய் என்றே கூவும் ஆல் ⋆
கோள் வினை ஆட்டியேன் ⋆
கோதையே ‖ **4.2.3** ‖

கோதில வண் புகழ் ⋆
கொண்டு சமயிகள் ⋆
பேதங்கள் சொல்லிப் ⋆
பிதற்றும் பிரான் பரன் ⋆
பாதங்கள் மேல் அணி ⋆
பைம் பொன் துழாய் என்றே ஓதும் ஆல் ⋆
ஊழ் வினையேன் ⋆
தடந் தோளியே ‖ **4.2.4** ‖

தோளி சேர் பின்னை பொருட்டு ⋆
எருதேழ் தழீ இக்கோளியார் ⋆
கோவலனார் ⋆
குடக் கூத்தனார் ⋆
தாள் இணை மேல் அணி ⋆
தண்ணம் துழாய் என்றே நாளு நாள் ⋆
நைகின்றதால் ⋆
என்தன் மாதரே ‖ **4.2.5** ‖

மாதர் மா மண் மடந்தை பொருட்டு ⋆
ஏனம் ஆய் ⋆
ஆதி அம் காலத்து ⋆
அகல் இடம் கீண்டவர் ⋆
பாதங்கள் மேல் அணி ⋆
பைம் பொன் துழாய் என்றே ஓதும் மால் ⋆

எய்தினள் ⋆
என்தன் மடந்தையே ॥ **4.2.6** ॥

மடந்தையை ⋆
வண் கமலத் திருமாதினை ⋆
தடம் கொள் தார் மார்பினில் ⋆
வைத்தவர் தாளின் மேல் ⋆
வடம் கொள் பூம் தண்ணம் துழாய் மலர்க்கே ⋆
இவள் மடங்குமால் ⋆
வாணுதலீர் ! ⋆
என் மடக்கொம்பே ॥ **4.2.7** ॥

கொம்பு போல் சீதை பொருட்டு ⋆
இலங்கை நகர் ⋆
அம்பெரி உய்த்தவர் ⋆
தாள் இணை மேல் அணி ⋆
வம்பவிழ் தண்ணம் துழாய் மலர்க்கே ⋆
இவள் நம்புமால் ⋆
நான் இதற்கென் செய்கேன் ⋆
நங்கைமீர் ! ॥ **4.2.8** ॥

நங்கைமீர் ! நீரும் ⋆
ஓர் பெண் பெற்று நல்கினீர் ⋆
எங்ஙனே சொல்லுகேன் ⋆
யான் பெற்ற ஏழையை ⋆
சங்கென்னும் சக்கரம் என்னும் ⋆
துழாய் என்னும் ⋆

இங்ஙனே சொல்லும் ⋆
இராப் பகல் என் செய்கேன் ‖ **4.2.9** ‖

என் செய்கேன் என்னுடைப் பேதை ⋆
என் கோமளம் ⋆
என் சொல்லும் ⋆
என் வசமும் அல்லள் நங்கைமீர் ⋆
மின் செய் பூண் மார்பினன் ⋆
கண்ணன் கழல் துழாய் ⋆
பொன் செய் பூண் மென் முலைக்கென்று ⋆
மெலியுமே ‖ **4.2.10** ‖

‡ மெலியும் நோய் தீர்க்கும் ⋆
நம் கண்ணன் கழல்கள் மேல் ⋆
மலி புகழ் வண் குருகூர்ச் ⋆
சடகோபன் சொல் ⋆
ஒலி புகழ் ஆயிரத்து ⋆
இப்பத்தும் வல்லவர் ⋆
மலி புகழ் வானவர்க்காவர் ⋆
நற்கோவையே ‖ **4.2.11** ‖

அடிவரவு — பாலனாய் வல்லிசேர் பாவியல் கோதில தோளி மாதர் மடந்தை கொம்பு நங்கைமீர் என் மெலியும் கோவை

பாலனாய் முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்